**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **<u>தேதி</u>**.29.01.2026

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 29.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.வினோத்குமார்** | **இனம்** | **ஆண்** |
| **த/பெ.** | **திரு.சண்முகம்** | **ஊர்/வட்டம்** | **கத்தாரிக்குப்பம்/வாலாஜா** |
| **வயது** | **50/2026** | **தொழில்** | **கூலி வேலை** |

துவக்க நேரம் 11.40 A.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரபப்பில் முதன்மை சாட்சியம்:–

1. நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். வாதி மற்றும் 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தந்தையான தாமோதர ராவ் அவர்களுக்கு சொந்தமானதாகும். மற்ற விவரங்களை நான் எனது எழுத்து மூல சாட்சியத்தில் சொல்லியுள்ளேன்.

2. என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் பத்திரத்தில் **(பி.வா.த.சா.ஆ.2)ல்** உள்ள சாட்சி கையெழுத்து என்ற இடத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் இந்த கையெழுத்தை பி.த.சா.ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். முதலாவது கையெழுத்து மட்டும் **பி.வா.த.சா.ஆ.11** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

எனவே என்னுடைய எழுத்துமூல சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளகேட்டுக்கொள்கிறேன்.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. 1வது பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவருடைய தோட்டத்தில் எனது அப்பா வேலை செய்து வந்தார், எந்த வருடத்தில், எந்த இடத்தில், வேத்தாத்ரி நிலம் வாங்கினார் என்றால் 2004ம் ஆண்டு கத்தாரிக்குப்பபத்தில் வாங்கினார். அதனுடைய சர்வே எண் என்னவென்றால் 187 ஆகும். மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்பதால் மேற்படி வேத்தாத்ரி எனக்கு நன்கு தெரியும்.

2. எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தந்தை தாமோதர ராவ்க்கு சொந்தமானது என நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சிட்டாவின் அடிப்படையில் சொந்தமானது. சிட்டா என்றால் பட்டாவா என்றால் ஆமாம். வழக்கு சொத்து சம்பந்தமாக தாமோதர ராவ் பெயரில் பத்திர ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து போட அழைத்தார் அதனால் சென்றேன்.

3. நான், **பி.த.சா.ஆ.2** ல் கையெழுத்திட்டதாக சொல்லும் நேரத்தில் தாமோதர ராவ்விற்கு என்ன வயதிருக்கும் என்றால் 70 லிருந்து 75 வயதிருக்கும். என்னிடம் காட்டப்படும் **பி.த.சா.ஆ.2** ல் 7ம் பக்கத்தில்

சாட்சிகள் என்ற இடத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான், என்னுடைய பெயர் விலாசம் உள்ளது. என்னுடைய கையெழுத்து இல்லாமல் இருக்கும் பகுதியைதான் **பி.த.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. நான் பிரமாண வாக்குமூலத்தில் குறியீடு செய்ய கேட்டுக்கொண்ட பகுதியும், **பி.த.சா.ஆ.2** ல் என்னால் குறியீடு செய்யப்பட்ட பகுதியும் வெவ்வேறானது என்றால் அதுபற்றி தெரியவில்லை. 1ம் பிரதிவாதி அழைத்ததின்பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், தாமோதர ராவிற்கும் எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்றாலும், **பி.த.சா.ஆ.2** யை ஏற்படுத்த தாமோதர ராவிற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

5. நானும், 1ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதியின் தந்தை தாமோதர ராவ் ஆகிய மூவரும் கூட்டுசேர்ந்து கொண்டு வழக்கு சொத்தை வாதிகளிடமிருந்து அபகரிப்பதற்காக **பி.த.சா.ஆ.2** தான செட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் தவறு. வழக்கு சொத்து முழுமையாக வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 1.20 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.